ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2293/22 - 2022 අගෝස්තු මස 16 වැනි අඟහරුවාදා - 2022.08.16
2293/22 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78*(XV)(ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (அ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) (அ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் ஏ.டி. சுசில் பிரேமஜயந்த் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும்) 2007, ஒற்றோபர் 09 ஆந் திகதிய 1518/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளைமூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்:-

(1) அதன் நிரல் I இலும் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்றதும் (2019, செத்தெம்பர் 02 ஆந் திகதிய 2139/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டதுமான) “இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்” என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| “சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம். | 1. இசைத்துறை<br>2. வாத்திய இசைத்துறை<br>3. நடனத்துறை<br>4. ஓவியத்துறை<br>5. சிற்பத்துறை<br>6. நாடக மற்றும் அரங்கேற்றற் கலைகள் துறை”;<br>அத்துடன் |

1A - PG 5930 — 457 (2022/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அட்டவணையின் நிரல் I இலும் அதன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்றதும் (2020, பெப்புருவரி 19 ஆந் திகதிய 2163/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டதுமான) “கலைப்பீடம்” என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| “கலைப்பீடம் | 1. பொருளியல் துறை |
| | 2. புவியியல் துறை |
| | 3. தத்துவவியல் துறை |
| | 4. மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறை |
| | 5. கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத் துறை |
| | 6. தமிழ்த் துறை |
| | 7. வரலாற்றுத் துறை |
| | 8. கல்வித் துறை |
| | 9. நுண்கலைத் துறை |
| | 10. அரசியல் விஞ்ஞானத் துறை |
| | 11. சமூகவியல் துறை |
| | 12. சட்டத் துறை |
| | 13. ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை |
| | 14. ஊடகக் கற்கைகள் துறை |
| | 15. மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை”. |

**ஏ. டி. சுசில் பிரேமஜயந்த்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, ஓகத்து 16.

EOG 08-0138

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.